அளவுக்கு அதிலே கவனம் செலுத்துவதற்கு உதவியாக இருக்கும் என்பது என்னுடைய ஆலோசனை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: விவாதத்தைத் தொடங்கி சில உறுப்பினர்கள் பேசிக்கொண்டிருக்கலாம். அதற்கு மத்தியிலே தலைவர்கள் போய் முதல் அமைச்சர் அவர்களுடன் கலந்து தக்க முடிவுகள் எடுக்கலாம்.

4. கவன ஈர்ப்பு.

திருத்துறைப்பூண்டி வட்டத்தில் பறவைகளினால் பயிர்களுக்கு ஏற்பட்ட சேதம்.

திரு. ந. தருமலிங்கம்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டம் முழுவதிலுமுள்ள நஞ்சை நிலங்களில் விளைந்துள்ள தானியங்களை (நெற்கதிர் மணிகளை) "சிறவி" என்ற கொடுமையான பறவைகள் கூட்டம் கூட்டமாக வந்து அழித்து நாசம் செய்து வருவதைத் தடுக்கும் முறையில் எந்த விதமான கட்டுப்பாடுமின்றி இந்த சிறவிப் பறவைகளை பிடித்துக் கொள்ள விவசாயிகளுக்கு அனுமதியளிக்க வேண்டிய அவசியம் பற்றிய அவசரமும் பொது முக்கியமுமான காரியத்தை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் திருத்துறைப் பூண்டி தாலுக்கா தலைஞாயர் பஞ்சாயத்து ஒன்றிப்பு பகுதிகளில் நெற்பயிர்களை, சிறவி, சம்புக்கோழி, உள்ளான் முதலிய பறவைகள் சேதப்படுத்துகின்றன என்றும், அவைகளைச் சுடுவதற்கும், பிடிப்பதற்கும், அவரிக்காடு, வாட்டாகுடி, ஓரடியம்பலம் கிராம மக்கள் அரசினிடம் அனுமதி கோரியிருந்தார்கள். இந்தப் பறவை இனங்களால் சேதப்படுத்தப்பட்ட இடத்தை, சேர்ந்து பார்வையிட விவசாய கூட்டு நெறியாளர், சென்னை மாநில வன விலங்கு அலுவலர், தஞ்சை மாவட்ட வருவாய் அலுவலர் இவர்கட்கு அரசு உத்தரவு அனுப்பியது. இவர்கள் அந்த இடத்தை 25—2—1968 அன்று பார்வையிட்டார்கள். திரு. தருமலிங்கம், எம்.எல்.ஏ., தலைஞாயர் பஞ்சாயத்து ஒன்றிப்பு தலைவர், தலைஞாயர், வண்டல் கிராமங்களைச் சேர்ந்த முக்கிய விவசாயிகளும் அதிகாரிகள் பார்வையிடும்போது உடன் இருந்தார்கள். அதிகாரிகளால் ஓர் அறிக்கை அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதிகாரிகளும் திரு. தருமலிங்கம் அவர்களும் சேர்ந்து அரசாங்கத்திற்குக் கீழ்க்கண்ட சிபாரிசுகளை அனுப்பியிருக்கின்றனர்.

(1) கீழ்க்கண்ட பறவைகள் அறுவடை காலத்தில் (நவம்பர் முதல் பிப்ரவரி வரை) நெல்வயல்களில் பயிர்களுக்குச் சேதம் விளைவித்தால் அவைகளை விரட்டுவதற்கும், வலைவைத்துப் பிடிப்பதற்கும் அல்லது சுடுவதற்கோ சலுகை கொடுக்க வேண்டும்.

(அ) சிறவி.

(ஆ) சம்புக்கோழி.

(இ) உள்ளான்.

(2) இந்தப் பறவைகளை விற்பனை செய்வதற்கு தலைஞாயர், வேதாரணயம், முத்துப்பேட்டை பஞ்சாயத்து ஒன்றிப்பு எல்லைகளுக்கு வெளியே கொண்டுபோகக்கூடாது.

(3) இந்தச் சலுகையை தவறான முறையில் பயன்படுத்தாமலிருப்பதற்காக, சட்டப் பேரவை உறுப்பினர், பஞ்சாயத்து ஒன்றிப்புகளின் தலைவர்கள், கிராமப் பெருமக்கள், வனவிலங்கு பணியாளர் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று அமைக்க வேண்டும்.

(4) விவசாயத் துறை பொறுத்தமட்டில் பறவையினங்களைப் பற்றிய ஆராய்ச்சி நடத்த இந்திய விவசாய ஆராய்ச்சி மன்றத்தால் ஊக்குவிக்கப்படுகின்ற ஒரு திட்டம் உள்ளது. இந்த ஆராய்ச்சி மற்ற இடங்களோடு தலைஞாயரிலும் நடத்தப்பட வேண்டும்.

(5) இந்தச் சலுகைகளை 1968-69 பருவ காலத்தில் அமல் நடத்த வேண்டும். 1969 மார்ச் மாதத்தில் மறுபரிசிலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

இந்தச் சிபாரிசுகளை அரசு ஏற்புக்கொண்டுள்ளது. கூடிய விரைவில் உத்தரவு பிறப்பிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, 41-வது விதியின்கீழ் திரு. எம். சுரேந்திரன் அவர்கள் பொதுப் பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவரக் கூடிய தீர்மானம் பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

5. அரசினர் தீர்மானம்.

உறுப்பினர் திரு. வ. ஜார்ஜ் மீதான வழக்குபற்றிய அவையுரிமைக் குழுவின் அறிக்கையை ஏற்றல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, அவையுரிமைக் குழுவின் அறிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கோருவார்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. ஜார்ஜ் அவர்கள் பேரவையின் உரிமையை மீறியதாக ஏற்பட்ட வழக்குபற்றி 25—3—1968-ம் நாளன்று இப்பேரவைக்கு அளிக்கப்பட்ட அவையுரிமைக் குழுவின் அறிக்கை சட்டப் பேரவையின் 191 (b) விதியின்கீழ் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அறிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"அவையுரிமைக் குழுவின் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை சட்டப் பேரவையின் 191 (d) விதியின்கீழ் இப்பேரவை இசைந்து ஏற்றுக்கொள்கிறது."